**நுவரெலியா மாநகர சபை - 2023**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

நுவரெலியா மாநகர சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த நிதி செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மாநகர சபை சட்டத்தின் (252 அதிகாரம்) 219 ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்களிலிருந்து 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நுவரெலியா மாநகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான நிருவாகத்தினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் நடைமுறைகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக் கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கள்களுக்காக அடிப்படையான கொடுக்கல்வாங்கல்கள் நிகழ்வுகள் பிரதான உள்ளக கட்டுப்பாட்டு மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்
- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்
- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 வேறு சட்டரீதியான தேவைகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பின்வரும் தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1) (ஈ) (iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் பிரகாரம் மாநகர சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஏற்புடையதாகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1) (ஈ) (iv) பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் பிரகாரம் முன்னைய ஆண்டில் என்னால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுகள்

### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பரீட்சை மீதியில் வரவு மற்றும் செலவு மீதிகள் ரூபா. 2,363,043 இனால் சமப்படாமை தொங்கல் கணக்கில் வரவு வைக்கப்பட்டு பின்னர் வலுக்கள் இனங் காணப்பட்டு சீர் செய்யப்பட வேண்டியிருந்த போதும் அவ்வாறு செய்யப்படாது முறையற்ற வகையில் திரண்ட நிதியிலிருந்து பதிவழிக்கப்பட்டிருந்தது. | கணக்கை சீர் செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுப்பதாக | கணக்கு சமப்படாமைக்கான காரணங்களை ஆராய்ந்து மீதிகளை சீராக்கம் செய்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதித் திகதியன்று நிலுவையாகவிருந்த வியாபார அனுமதிப்பத்திரக் கணக்கு மீதியினுள் அடங்கியுள்ள ரூபா. 861,800 மீளப் பெற வேண்டிய வருமானமென கணக்கிடப்பட்டமை காரணமாக இரட்டிப்பாக கணிப்பீடு இடம் பெற்றிருந்தது. | 2024 ஆம் ஆண்டுக்கான இறுதிக் கணக்குகளைத் தயாரிக்கும் பொழுது சீர் செய்வதாக. | கணக்கு மீதிகள் சீர் செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | ஆரம்ப மீதிகளை சீர் செய்வதற்காக நானாவித வைப்புக் கணக்கில் ரூபா. 259,779 வரவு வைக்கப்பட்டிருந்த போதும் வேறு ஒரு கணக்கொன்றில் செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக கணக்கு சமப்படுத்தப்பட்ட முறை தெளிவற்றதாகக் காணப்பட்டது. | 2024 ஆம் ஆண்டுக்கான இறுதிக் கணக்குகளைத் தயாரிக்கும் பொழுது சீர் செய்வதாக. | கணக்கு மீதிகள் சீர் செய்யப்படல் வேண்டும். |
| (ஈ) | அரச மற்றும் இரண்டு தனியார் வங்கிக் கிளைகளில் பராமரிக்கப்பட்டு வருகின்ற இரண்டு நடைமுறைக் கணக்குகளில் நேரடி வைப்புக்கள், இனங்காணப்படாத பெறுவனவுகள், வங்கியினால் அறவிடப்பட்டிருந்த வங்கிக் கட்டணங்கள் மற்றும் வங்கி சீராக்கல்களுடன் தொடர்பான கூட்டுத்தொகை ரூபா. 12,845,106 இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை | எதிர்காலத்தில் சீர் செய்வதற்கான நடவடிக்கை எடுப்பதாக | வங்கி இணக்கக் கூற்றைத் தயாரிப்பதற்கு முன்னர் அவ்வாறான மீதிகள் இனங் காணப்பட்டு காசேடு திருத்தம் செய்யப்படல் வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டின் இறுதித் திகதியன்று நிதிக் கூற்றுக்களில் ரூபா. 2,500,000 விலைகுறித்த வாகனத்தின் பெறுமதி இரட்டைக் கணிப்பு செய்யப்பட்டிருந்தமை காரணமாக மோட்டார் வாகனம் மற்றும் இழுவண்டி அத் தொகையினால் கூடுதலாகக் காட்டப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் குறித்த சீராக்கலுக்கான நடவடிக்கை எடுப்பதாக | கணக்கு மீதிகள் சீர் செய்யப்படல் வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டிற்குரிய தொடர்பான 2024 ஆம் ஆண்டு 10 சந்தர்ப்பங்களில் செலுத்தப்பட்ட ரூபா. 1,239,060 மற்றும் கொள்வனவு ஆணை பிறப்பிக்கப்பட்ட களஞ்சியப் பொருட்களின் கூட்டுத்தொகை ரூபா. 1,706,208 கடன் கொடுத்தோரின் கீழ் கணக்கீடு செய்யப்படாதிருந்ததுடன் முன்னைய ஆண்டுகளில் தீர்க்கப்பட்டிருந்த ரூபா 617,365 களஞ்சியக் கடன் கொடுத்தோர் மீதிகள் தொடர்ந்தும் களஞ்சியக் கடன் கொடுத்தோர் கணக்கின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | குறித்த சீராக்கல்களை மேற்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக | வருட இறுதியில் அனைத்து பொறுப்புகளும் கணக்கீடு செய்யப்பட வேண்டியதுடன் கணக்கு மீதிகள் சீர் செய்யப்படல் வேண்டும். |
| (எ) | மீளாய்வாண்டில் இலங்கை சுற்றுலா அதிகாரசபையில் பதிவு செய்யப்பட்ட ஒரு ஹொட்டலிலிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா. 5,404,257 வருடத்தின் வருமானம் எனக் கணக்கிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் குறித்த சீராக்கலுக்கான நடவடிக்கை எடுப்பதாக | கணக்கு மீதிகள் சீர் செய்யப்படல் வேண்டும். |
| (ஏ) | பொது வினியோக கடன் கொடுத்தோரினுள் மீளாய்வாண்டின் இறுதித் திகதியன்று காணப்பட்ட ரூபா. 617,365 ஆன செலவுகள் ஏற்கனவே செலுத்தி முடிக்கப்பட்டிருந்த போதும் தொடர்ந்தும் செலுத்த வேண்டிய தொகையாக காண்பிக்கப்பட்டிருந்தது. | 2024 ஆம் ஆண்டுக்கான இறுதிக் கணக்குகளைத் தயாரிக்கும் பொழுது சீர் செய்வதாக. | கடன் கொடுத்தோர் மீதிகள் சீர் செய்யப்படல் வேண்டும் |

**1.6.2 இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்ட 02 கணக்குகள் தொடர்பான மீதிகள் அவற்றுடன் தொடர்பான ஆரம்ப ஏடுகள் மற்றும் உபயோகப் ஆவணங்களின் மீதிகளுடன் ஒப்பிடுகையில் ரூபா 8,626,982 ஆன இணக்கமின்மை அவதானிக்கப்பட்டது. | சீர் செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுப்பதாக | இணக்கமின்மைகளை ஆராய்ந்து தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | இறுதி இருப்பு களஞ்சிய மீதியை முன்கொண்டு வரும் பொழுது 153 இருப்புக் கூறுகளின் மீதிகள் மறைப் பெறுமதியில் காட்டப்பட்டிருந்தமை காரணமாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த ரூபா 64,163,288 பெறுமதியான இருப்பு மீதியின் பிழையற்ற தன்மையினை உறுதிப்படுத்த முடியாமலிருந்தது. | சீராக்குவதற்கு தேவையான நடவடிக்கை எடுப்பதாக | களஞ்சிய பேரேடுகள் மற்றும் இருப்புக் கட்டுப்பாட்டினை முறைப்படுத்தல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் இறுதித் திகதியன்று கணினி மென்பொருள்களினூடாகப் பெற்றுக்கொண்ட இருப்பு மீதி மற்றும் மீளாய்வாண்டின் திசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான பொருள் பரிசோதனை அறிக்கைக்கு அமைவாக 54 களஞ்சியப் பொருட்களில் ரூபா. 2,433,086 வித்தியாசம் காணப்பட்டது. | சீராக்குவதற்கு தேவையான நடவடிக்கை எடுப்பதாக | - - மேற்படி - |
| (ஈ) | மின்சார புகையிரதத்தின் பெறுமதி நிலையான சொத்துப் பேரேட்டில் ரூபா 36,514,040 எனக் காட்டப்பட்டிருந்த போதும் நிதிக் கூற்றுக்களில் ரூபா. 19,920,398 எனக் காட்டப்பட்டிருந்தமை காரணமாக ரூபா 16,593,642 இணக்கமின்மை காணப்பட்டது. | சீராக்குவதற்கு தேவையான நடவடிக்கை எடுப்பதாக | கணக்கு மீதிகள் சீர் செய்யப்படல் வேண்டும். |

**1.7 இணங்காமைகள்**

**1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| **(அ)** | **சட்டங்கள்** | | | |
| i. | மாநகர சபைச் சட்டம் (அதிகாரம் 252) பிரிவு 247 உ (1) பிரிவு | சபையின் அதிகாரப் பிரதேசத்தினுள் 04 தனியார் நிறுவனங்களினால் ஏலத்தில் விற்பனை செய்யப்பட்ட 46 காணிகளுக்கான விற்பனை மீதான வரி ரூபா. 5,376,761 குறைத்து அறவிடப்பட்டிருந்தது. | அறவிடுவதற்குத் தேவையான அடுத்த கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| ii | 2022 இன் ஜனவரி 27 ஆம் திகதிய 2268/18 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க சுற்றாடல் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பட்டியலின் (அ),(ஆ),(இ) பிரிவுகள் | நகரசபை எல்லையினுள் உள்ள 64 ஹோட்டல்கள் மற்றும் வாடிவீடுகளுக்கான சுற்றாடல் அனுமதிப் பத்திரத்தை பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மாநகர சபை அதிகாரப் பிரதேசத்தினுள் காணப்படும் ஹொட்டல்கள் மற்றும் வாடி வீடுகளுக்கான சுற்றாடல் அனுமதிப் பத்திரத்தை பெற்றுக் கொள்ளுமாறு அறிவுறுத்துவதற்கான நடவடிக்கை எடுப்பதாக | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| iii. | 1993 இன் ஜுன் 24ஆம் திகதிய 772/22 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் பிரிவு 23 (v) மற்றும் அதிகாரம் 450 | போனி ஓடுபாதையொன்றினை சேற்றுநிலத்தில் அமைக்கும் திட்டம் 2023 பெப்ரவரி 23 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2023 ஏப்ரல் 20 ஆம் திகதி சுற்றாடல் அதிகார சபையின் அனுமதிக்காக விண்ணப்பிக்கப்பட்டு சுற்றாடல் அதிகார சபையின் எதிர்ப்பின் மத்தியில் இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | திட்டம் தொடர்பாக மத்திய சுற்றாடல் அதிகார சபையின் மூலம் வேறு பரிந்துரைகள் பெற்றுத் தரப்படுமாயின் அதற்கமைவாக செயற்பட்டு இத் திட்டத்தினை வெற்றிகரமாக செய்து முடிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| i. | 2015 இன் யூலை 14 ஆம் திகதிய 2015/03 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் திருத்தப்பட்ட நி.பி. (2) 371 (ஆ) மற்றும் பிரிவு 05 | 05 தொடக்கம் 08 வருடங்களுக்கிடைப்பட்ட காலமாக காணப்பட்டு வந்த ரூபா. 1,189,500 பெறுமதியான 08 முற்கொடுப்பனவு மீதிகள் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | முற்பணத்தை தீர்வு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு எழுத்து மூலமாக அறிவுறுத்தப்பட்டுள்ளதாக | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| ii. | நி.பி 396 (ஈ) | இரண்டு அரச வங்கிக் கிளைகளில் பராமரிக்கப்பட்டு வருகின்ற நடைமுறைக் கணக்குகளில் மீளாய்வாண்டின் திசம்பர் 31 இல் மொத்தம் ரூபா. 14,244,223 பெறுமதியான 87 காலம் கடந்த காசோலைகள் 06 மாதம் தொடக்கம் 02 வருடங்களுக்கிடைப்பட்ட காலத்தினுள் தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை | சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளைத் தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுப்பதாக | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**2.** **நிதி மீளாய்வு**

**2.1** **நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 231,769,227 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 219,928,379 ஆக இருந்தது.

**2.2** **வருமான நிர்வாகம்**

**2.2.1** **மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | **2023** | | | | **2022** | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | **ரூபா.** | **ரூபா.** | **ரூபா.** | **ரூபா.** | **ரூபா.** | **ரூபா.** | **ரூபா.** | **ரூபா.** |
| (i) | வீதவரியும் வரியும் | 140,549,100 | 122,819,119 | 110,778,126 | 137,974,418 | 139,912,400 | 129,038,341 | 138,880,404 | 125,933,424 |
| (ii) | வுாடகை | 111,932,700 | 63,991,762 | 53,240,344 | 70,378,359 | 78,955,000 | 58,864,187 | 56,869,600 | 73,329,599 |
| (iii) | அனுமதிப்பத் திரக் கட்டணங்கள் | 22,252,000 | 26,908,286 | 25,343,036 | 34,341,807 | 19,807,000 | 23,595,274 | 17,610,877 | 27,280,075 |
| (iv) | ஏனைய வருமானம் | 439,352,100 | 105,425,835 | 38,853,911 | 108,658,328 | 465,849,100 | 54,395,698 | 45,294,666 | 47,561,373 |
| | மொத்தம் | 714,085,900 | 319,145,002 | 228,215,417 | 351,352,912 | 704,523,500 | 265,893,500 | 258,655,547 | 274,104,471 |

**2.2.2** **வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்**

சபையின் வருமானம் சேகரிப்பின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புகள் கீழ்வருமாறு

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | **வீதவரி மற்றும் வரி** | | |
| (i) | மீளாய்வாண்டின் இறுதித் திகதியன்று நிலுவையாகவிருந்த வீதவரி மற்றும் வரி | நிலுவைகளை அறவிடுவதற்கான | சட்ட ஏற்பாடுகளன் பிரகாரம் |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா. 84,347,443 ஆகவிருந்ததுடன் இதில் தனியார் சொத்துக்கள் மூலம் அறவிடப்பட வேண்டிய வீதவரி நிலுவை ரூபா. 68,361,868 ஆகவிருந்தது. இதில் ரூபா. 62,765,267 தொகை 01 வருடம் முதல் 10 வருடங்களுக்கும் மேற்பட்ட காலம் அறவிடப்பட வேண்டியிருந்தது. | நடவடிக்கை எடுப்பதாக | நிலுவைவருமானங் களை அறவிடல் வேண்டும் |
| (ii) | மீளாய்வாண்டினுள் சொத்துக்களை தடை செய்வதற்காக வீதவரி நிலுவையாகவிருந்த 1221 வளாகங்கள் இனங்காணப்பட்டிருந்த போதும், இதில் 09 வளாகங்களின் சொத்துகள் மாத்திரம் தடை செய்யப்பட்டு வீதவரி ரூபா. 467,063 அதாவது நிலுவையில் 0.56 வீதம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. சொத்துகள் தடை செய்யப்படும் பொழுது ரூபா. 100,000 இற்கும் மேற்பட்ட தொகை நிலுவையாகவிருந்த 42 வளாகங்கள் காணப்பட்ட போதும், சொத்துகளைத் தடை செய்வதற்காக தேர்ந்தெடுக்கப் பட்டிருந்த வளாகங்களின் நிலுவை ரூபா. 9985 தொடக்கம் 88,757 இற்கு இடைப்பட்டு இருந்தது. | - - மேற்படி - | - - மேற்படி - |
| (ஆ) | **வாடகை** | | |
| i. | 2015 ஆம் ஆண்டு அபிவிருத்திச் செய்பாடொன்றின் போது வீடுகளை இழந்தவர்களுக்காக வேறொரு இடத்தில் ஒரு மாதத்திற்கு ரூபா. 1000 எனும் அடிப்படையில் 40 ஆண்டுகளுக்கான கட்டணம் ரூபா. 480,000 என சொத்து மதிப்பீடு செய்யப்பட்டு 04 சொத்துக்களை அவர்களுக்கு கையளிப்பதற்கும் ஒரு வீட்டை நிர்மாணிப்பதற்காக ரூபா. 400,000 தொகையை அறவிடு செய்து கையளித்தல் எனும் ஒப்பந்தத்தின் பேரில் வீடுகள் கையளிக்கப்பட்டிருந்த போதும், அவ் வீடுகள் மூலம் சபைக்கு அறவிடப்பட வேண்டிய ரூபா. 1,807,000 தொகையை மீளாய்வாண்டின் திசம்பர் 31 ஆம் திகதி வரை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அது தொடர்பாக எதிர்வரும் நடவடிக்கை எடுப்பதாக | நிலுவை வருமானங்கள் அறவிடப்படல் வேண்டும். |
| ii. | 2015 ஜனவரி 27 ஆம் திகதிய 2015/1 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் சுற்றறிக்கையின் (அ) பிரிவின் பிரகாரம் செயற்பட்டு நகரசபை அதிகாரப் பிரதேசத்தினுள் அமைந்துள்ள, 01 வருடத்திற்கும் மேற்பட்ட நிலுவை வாடகை காணப்பட்ட 267 கடைகளிலிருந்து ரூபா. 42,398,365 கடை வாடகை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவைகளை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக | - ” மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| iii. | 2023 திசம்பர் 31 ஆம் திகதியன்று நகரசபை அதிகாரப் பிரதேசத்தினுள் அமைந்துள்ள 41 கடைகளில் மொத்தம் ரூபா. 3,009,505 கடை வாடகை நிலுவை காணப்பட்டதுடன் 01 தொடக்கம் 05 வருடங்களுக்கு இடையிலான காலப்பகுதியில் 26 கடை உரிமையாளர்களிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா. 2,769,067 அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை கட்டணங்களை அறவிடுவதற்கான திட்டமொன்று அமைக்கப்பட்டுள்ளதாக | - " மேற்படி - |
| (இ) | **அனுமதிப்பத்திரக் கட்டணம்** | | - |
| i. | 1981 ஜனவரி 20 ஆம் திகதிய 541/17 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 1952 இன் 08 ஆம் இலக்க உள்ளுராட்சி மன்ற (அனுமதிக்கப்பட்ட உப சட்டக் கோவை) சட்டத்தின் XVIII ஆம் வாகனங்களை நிறுத்தி வைத்தல் உப சட்டக் கோவையின் II ஆம் பிரிவு மோட்டார் வாகனங்களை நிறுத்தி வைத்தல் அத்தியாயத்தின் 08 ஆம் பிரிவிற்கு அமைவாக செல்லுபடியாகும் அனுமதிப்பத்திரம் பெறப்படாது பதிவு செய்யப்படாத 12 சங்கங்களின் 158 முச்சக்கர வண்டிகள் நகரத்தில் சவாரி மேற்கொள்வதுடன் போக்குவரத்து சேவையில் ஈடுபடுகின்ற 24 வேன்கள் மற்றும் 253 முச்சக்கர வண்டிகள் வருடாந்த அனுமதிப்பத்திரத்தைப் பெற்றிருக்கவில்லை. | நிலுவை கட்டணங்களை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக | உப சட்டக்கோவையின் பிரகாரம் செயற்பட்டு நிலுவைகளை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ii) | 2023 திசம்பர் 31 ஆம் திகதியன்று வருடாந்த அனுமதிப்பத்திரக் கணக்கு மீதி ரூபா. 28,841,974 ஆகவிருந்ததுடன் அத் தொகை 01 வருடம் முதல் 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் தொடக்கம் 472 நபர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த போதும் அறவிடுவதற்கான முறையான வழிமுறைகள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை. | நிலுவைகள் அறவிடப்பட்டு வருவதாக | நிலுவை வருமானங்கள் அறவிடப்படல் வேண்டும். |
| (ஈ) | **நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்** | | |
| | மாகாண சபை பிரதான செயலாளர் மற்றும் ஏனைய பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளிடமிருந்து மீளாய்வாண்டின் திசம்பர் 31 திகதியன்று பெற வேண்டியிருந்த நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா. 222,175 ஆகவும் முத்திரைக் கட்டணம் ரூபா. 108,436,153 ஆகவும் இருந்தது. | கணக்காய்வு அவதானிப்புகளுடன் இணங்குவதாக | வருமானங்கள் அறவிடப்படல் வேண்டும். |

(உ) **வேறு வருமானங்கள்**

| | | | |
|---|---|---|---|
| i. | 06 கடைகளுக்கான கேள்விமனுக் கட்டணத்திலிருந்து நகர சபைக்கு கிடைக்க வேண்டிய தொகையான ரூபா. 11,199,465 ஆகவிருந்ததுடன், அதனுள் 05 வருடங்களைக் கடந்த மீதி ரூபா. 2,804,914 மற்றும் 01 தொடக்கம் 05 வருடங்களுக்கு இடைப்பட்ட காலத்திலிருந்து நிலுவையாகவிருந்த மீதி ரூபா. 5,079,57ì காணப்பட்ட போதும் நிலுவை மீதிகளை அறவிடுவதற்காக மாநகர சபைச் சட்டத்தின் 254 (அ) (1) பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | கணக்காய்வு அவதானிப்புகளுடன் இணங்குவதாக | நிலுவை வருமானங்கள் அறவிடப்படல் வேண்டும். |
| ii | 2023 திசம்பர் 31 அன்று நிலுவை நீர்க் கட்டண மீதி ரூபா. 34,662,599 ஆகவிருந்ததுடன் இதில் 01 வருடம் முதல் 10 வருடங்களுக்கும் கூடுதலான காலமாக 1479 கூறுகளிலிருந்து ரூபா. 13,655,196 ஆன நீர்க் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. இதில் ரூபா. 7,401,529 அதாவது 21 வீதம் 130 அரச நிறுவனங்களிலிருந்து அறவிடப்பட வேண்டியிருந்தது. | எதிர்காலத்தில் நிலுவைகளை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுப்பதாக | நிலுவை வருமானங்கள் அறவிடப்படல் வேண்டும். |
| iii | மீளாய்வாண்டின் திசம்பர் 31 அன்று நில வரியாக 168 நபர்களிடமிருந்து ரூபா. 18,964,375 நிலுவை அறவிடப்பட வேண்டியிருந்ததுடன், அந் நிலுவை மீதியினுள் 01 வருடம் முதல் 20 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் நிலுவையாகக் காணப்பட்ட மீதி ரூபா. 17,597,708 ஆக இருந்தது. | முகாமைத்துவக் குழுவிற்கு முன்வைத்து பொருத்தமான தீர்மானங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | நிலுவை வருமானங்கள் அறவிடப்படல் வேண்டும். |
| iv | மீளாய்வாண்டின் திசம்பர் 31 அன்று 22 வள்ள உரிமையாளர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா. 10,170,012 நிலுவைத் தொகை காணப்பட்டதுடன் அதில் ரூபா. 500,000 இற்கு கூடுதலான வள்ள உரிமையாளர்கள் 06 பேரிடமிருந்து ரூபா. 8,123,061 மீதி அறவிடப்பட வேண்டியிருந்தது. | பணத்தை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுப்பதற்கு வருமான பரிசோதகர்களுக்கு எழுத்து மூல அனுமதி வழங்கப்பட்டுள்ளது. | நிலுவை வருமானங்கள் அறவிடப்படல் வேண்டும். |
| (v | ஹாவாஎலிய கழிவு மீள்சுழற்சி நிலையத்தில் 2016 ஆம் ஆண்டுக்காக ரூபா. 598,125 மற்றும் உடுபுஸ்ஸல்லாவை வீதியிலுள்ள மீள்சுழற்சி நிலையத்தில் 2015 ஆம் ஆண்டுக்காக ரூபா. 122,286 தொகைகள் நிலுவையாக இருந்த போதும், அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அடுத்தகட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதாக | நிலுவை வருமானங்கள் அறவிடப்படல் வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 சட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள செயற்பாடுகளை மேற்கொள்ளல்**

மாநகர சபைச் சட்டத்தின் 04 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | **உப சட்டக்கோவை** | | |
| i. | வியாபார நோக்கத்தில் நடாத்தப்பட்டு வருகின்ற கிரெகரி வாவி வள்ளச் சவாரி சேவையினை முறைப்படுத்தல், கட்டுப் படுத்தல் மற்றும் கட்டணம் அறவிடல தொடர்பான உப சட்டக்கொவையொன்றினை தயாரித்து 2020 நவம்பர் 27 ஆம் திகதி அனுமதிக்காக மத்திய மாகாணத்தின் உள்ளூராட்சி ஆணையாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதும், மீளாய்வாண்டின இறுதித் திகதி வரையில் அதற்கான அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை | கணக்காய்வு அவதானிப்புகளுடன் இணங்குவதாக | தேவையான உப சட்டக் கோவைகளை பிறப்பிக்கப்படல் வேண்டும். |
| ii. | மாநகர சபைச் சட்டத்தின் 247 (அ) (இ) பிரிவுகளின் பிரகாரம் வருமானம் ஈட்டும் ஒரு தொழில் நடவடிக்கையாக மேற்கொள்ளப் பட்டு வரும் கோவேறு கழுதை சவாரியினை நெறிப்படுத்து வதற்கான உப சட்டக் கோவையினை வகுத்துக் கொள்வதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | கணக்காய்வு அவதானிப்புகளுடன் இணங்குவதாக | தேவையான உப சட்டக் கோவைகளை பிறப்பிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | **பொதுமக்கள் சேவைகளை நிறைவேற்றல்** | | |
| | மாநகர சபைச் சட்டத்தின் 96 ஆம் பிரிவின் விதிமுறைகளுக்கு அமைவாக மாநகர சபையின் மூலம் பொதுமக்களுக்காக குடிநீர் வினியோகம் செய்யப்படுகின்ற 09 நீர் மூலங்களிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட நீர் மாதிரிகள் பரிசோதிக்கப்பட்ட போது அந் நீரில் குடிநீர் தொடர்பாக அங்கீகர்க்கப்பட்ட நியமங்களை (SLS 614) விட குறைந்த தரம் காணப்படுவதாகவும், முறையாக குளோரின் கலப்பு இடம்பெறவில்லை என்பதாகவும் மற்றும் கோலிபோம் (Coliform) போன்ற பக்டீரியாக்கள் காணப்படுவதாகவும் அறிக்கைகளின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருந்த போதும் அது தொடர்பான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு அவதானிப்புகளுடன் இணங்குவதாக | பொதுமக்களுக்கு சுத்தமான குடிநீரை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 ஆகஸ்ட் 28 திகதிய 1199/09 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 2001 இன் 2 ஆம் இலக்க மாகாண சபை சாசனத்தின் பிரகாரம் முத்திரக் கட்டண வருமானம் 02 வருடங்களினுள் அறவிடப்பட வேண்டியிருந்த போதும், 2019ஆம் ஆண்டுக்காக சபையினால் அறவிடப்பட வேண்டிய ரூபா. 13,411,960 பெறுமதிக்காக சிட்டையிடப்பட்ட முத்திரைக் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | 02 வருடங்களைத் தாண்டிய நிலுவைகளை ஏடுகளிலிருந்து பதிவழிப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பதாக | நிலுவை வருமானங்களை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | கடந்த 05 வருட காலத்தினுள் மாநகர சபையினால் 05 சுற்றுலா அபிவிருத்தி புத்தாக்க செயற் திட்டங்களுக்காக வரவு வெலவுத் திட்டத்தின் மூலம் ரூபா. 31,000,000 ஒதுக்கப்பட்டிருந்த போதும், அதில் ரூபா. 1,627,205 ஆன 05 வீதம் மாத்திரமே பயன்படுத்தப் பட்டிருந்தமை காரணமாக 03 சுற்றுலா அபிவிருத்தி செயற் திட்டங்கள் இடைநிறுத்தப் பட்டிருந்ததுடன் 02 திட்டங்கள் மந்தகதியில் நடைபெற்றுக் கொண்டிருந்தன. | திட்டத்தினை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக | திட்டத்தினை நிறைவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | சபைக்குச் சொந்தமான கடைகளுக்கான கடை வாடகை மதிப்பீடு, மதிப்பீட்டுத் திணைக்களத்தின் மூலம் 2009ஆம் ஆண்டு இறுதியில் மேற்கொள்ளப் பட்டிருந்த போதும், அவ் வாடகையினை மீளாய்வாண்டின் திசம்பர் 31 வரை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்காததன் காரணமாக மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்ட 148 கடைகளின் மூலம் 15 வருடங்களினுள் சபை நிதியத்திற்கு ரூபா. 55,609,875 நட்டம் ஏற்பட்டிருந்தது. | மதிப்பீட்டுத் திணைக்களத்துடன் இணைந்து, காணப்படும் பிரச்சினைகளை கலந்தாலோசித்து தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக | மதிப்பிடப்பட்ட வாடகை அறவிடப்படல் வேண்டும். |

## 3.3 சர்ச்சசைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1989 ஜனவரி 20 ஆம் திகதிய 541/17 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 1956 இன் 06 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்ற அனுமதிக்கப்பட்ட உப சட்டக் கோவையின் XXXI ஆம் பொது களியாட்ட மற்றும் நாட்டியம் அனுமதிக்கப்பட்ட உப சட்ட விதிக் கோவை பிரிவு 1 இன் பிரகாரம் செயற்படாது நுவரெலியா கிரெகரி வாவிக்கு அருகில் 88.18 பேர்ச் பரப்புள்ள காணியை களியாட்ட பூமியாக நடாத்திச் செல்வதற்காக 2021 மார்ச் 23 ஆம் திகதி | எதிர்கால நடவடிக்கைகளை மேற்கொண்டு அறிக்கையிடுவதென | கேளிக்கை வரி அறவிடப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | முதல் 10 வருடங்களுக்கு வெளி நிறுவனமொன்றிற்கு நகர அபிவிருத்தி அதிகார சபையினால் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. அதன்படி குத்தகையாளர் மாநகர சபையின் வருடாந்த அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளாது களியாட்டத்தினை ஆரம்பித்து 03 வருடங்கள் கழிந்திருந்த போதும், களியாட்ட வரியினை அறவிடுவதற்கு எந்தவித சட்ட நடவடிக்கையும் எடுக்கப் பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | 2017 ஆம் ஆண்டில் ரூபா 12,087,162 செலவில் 200 சூரிய ஒளி மின் விளக்குகள் (24 வொட் மின்விளக்கு கம்பங்கள் 150 மற்றும் 36 வொட் மின் கம்பங்கள் 50) பொருத்தப்பட்டிருந்த திட்டத்தில் சூரிய ஒளி வீதி விளக்குகளுக்கான மின்கலங்கள் மாநகர சபை ஊழியர்களினால் கழற்றி அகற்றப்பட்டு அவை அழிந்து போவதற்கு விடப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்புகளுடன் இணங்குவதாக | குறித்த திட்டம் முறையான கண்காணிப்பின் கீழ் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும். |
| (இ) | கோல்ப் விளையாட்டு மைதானத்திற்கு குறுக்காக நடைபாதையொன்றினை அமைப்பதற்காக கோல்ப் விளையாட்டுக் கழகத்தினால் முன்வைக்கப்பட்ட வேண்டுகோலுக்கு இணங்க 2021 நவம்பர் 16 ஆம் திகதி நடைபெற்ற திட்டமிடல் குழுக் கூட்டத்தில் நடைபாதையினை "நகர சபையின் மூலம் வழங்கப்பட்டுள்ள திட்டத்திற்கமைவாக விளையாட்டுக் கழகத்தின் நிதியின் மூலமாக" அமைப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்த சந்தர்ப்பத்தில் மாநகர சபையினால் இது மேற்கொள்ளப்பட்டு ரூபா. 1,081,898 சபையின் நிதியத்திலிருந்து செலவிடப்பட்டு நட்டம் ஏற்படுத்தப்பட்டிருந்தது. | வரி செலுத்துகின்ற மற்றும் நுவரெலியா நகரத்திற்கு வருகின்ற சுற்றுலாப் பயணிகளுக்கு பாதுகாப்பாக பயணிப்பதற்காக அமைக்கப்பட்ட ஒன்றாகும் என்பதாக | அனுமதிக்கப்பட்ட நடைமுறைகள் மற்றும் உள்ளக கட்டுப்பாட்டு முறைமைகள் பின்பற்றப்பட்டு திட்டங்களை செயற்படுத்தாமை தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் வசந்தகாலக் கொண்டாட்டங்களுடன் இணைந்ததாக நகரை அழகுபடுத்தலுக்காக களப் பரிசோதனையின் பின்னர் மூன்று கை விலைப் பெறுமானங்களைப் பெற்றுக்கொண்டு 2023 பெப்ரவரி 03, மார்ச் 15 மற்றும் ஏப்ரல் 04 ஆகிய தினங்களில் ரூபா. 2,048,440 பெறுமதியான பூச்செடிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அவ்வாறாயினும் பூச்செடிகள் கொள்வனவு செய்யப்பட்ட நிறுவனம் தவிர்ந்த ஏனைய இரு நிறுவனங்களினாலும் சமர்ப்பிக்கப்பட்ட கடிதங்கள் போலியாகத் தயாரிக்கப்பட்டவை என தெரிய வந்ததன் | பூ விதைகளை கொள்வனவு செய்வதற்காக தெரிவுசெய்யப்பட்ட நிறுவனம் பூ விதைகளை வினியோகிக்க முடியாதெனக் கூறியதன் காரணமாக பூச்செடிகள் கொள்வனவு செய்ய வேண்டி ஏற்பட்டதாக. | பெறுகை நடைமுறை வெளிப்படையாக பிழையின்றி பின்பற்றப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காரணமாக ரூபா. 2,048,440 பெறுமதியான கொள்வனவுகள் விலைமனுக் கோரல் செயன்முறைக்கு முறனாக மேற்கொள்ளப்பட்ட ஒரு முறையற்ற செயலாகும். | | |
| (உ) | விக்டோரியா பூங்காவில் உயரம் குறைவான பூச்செடிகளை நடுவதற்கு பூச்செடிகளைக் கொள்வனவு செய்வதற்காக நகர சபைக் கணக்காளரிடம் ரூபா. 100,000 முற்பணத் தொகையினை 2023 ஏப்ரல் 04 ஆம் திகதி பெற்று, தெரிவுசெய்யப்பட்ட வினியோகஸ்தரிடம் பூச்செடிகள் கொள்வனவு செய்யப்படாது வேறு தனியார் நிறுவனம் ஒன்றிலிருந்து ரூபா. 94,500 பெறுமதியான செடிகள் கொள்வனவு செய்யப்பட்டு பின்னர் தெரிவு செய்யப்பட்ட வினியோகஸ்தரிடமிருந்து ரூபா. 126,000 இற்கான போலி பற்றுச்சீட்டுக்கள் பெறப்பட்டு முறைகேடு ஒன்ற மேற்கொள்ளப்பட்டிருந்தது. | நிறுவனமொன்றிலிருந்து செடிகளைக் கொள்வனவு செய்து போக்குவரத்து கட்டணஙடகளுடன் சேர்த்து வினியோகஸ்தரிடமிருந்து சிட்டை பெறப்பட்டதாக. | பெறுகை நடைமுறை பிழையின்றி பின்பற்றப்படல் வேண்டும். |
| (ஊ) | 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் 24(இ) மற்றும் 24(ஈ) பிரிவுகளின் அடிப்படையில் 2007 மார்ச் 05 ஆம் திகதிய 1487/10 இலக்க அதி விசேட வர்த்தமானியின் உப பிரிவு III இன் 03 ஆவது நிபந்தனைக்கமைவாக மத்திய சுற்றாடல் அதிகார சபையின் அனுமதியின்றியும் பரிந்துரை பெறப்படாமலும் கிரெகரி வாவியின் IV ஆம் கட்டத்தில் மாநகர சபையின் மூலமாக கொன்கிரிட் இடப்பட்டு கட்டடம் ஒன்றை அமைப்பதற்கு ரூபா. 3,733,373 செலவிடப்பட்டிருந்தது. இது தொடர்பாக மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் மாநகர சபைக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதற்கு ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டு, அனுமதி பெறப்பட்டு நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுவதாக. | சட்டத்தின் விதிமுறைகளுக்கேற்ப நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (எ) | விக்டோரியா பூங்காவின் சிற்றுண்டிச்சாலையை நடாத்துவது தொடர்பில் வருடாந்தம் 10 வீத அதிகரிப்பின் அடிப்படையில் 2011 மார்ச் 15ஆம் திகதி தொடக்கம் 10 வருடங்களுக்கு வாடகைக்கு விடுவதென 2011 பெப்ரவரி மாதம் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தீர்மாணிக்கப்பட்டு வாடகைக்கு விடப்பட்டிருந்தது. இவ் வாடகைதாரர் 2017ஆம் ஆண்டின் பின்னர் எந்தவொரு வாடகைத் தாகையையும் சபைக்குச் செலுத்தாது 2021 மார்ச் மாதம் வரை 45 மாதாந்தத் தவணைக் கட்டணங்களை நிலுவையாக்கி | சட்டரீதியான நடவடிக்கை மேற்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக | நிலுவைகளை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

இருந்ததுடன் 2021 மார்ச் 14ஆம் திகதி குறித்த ஒப்பந்தம் நிறைவு பெறும் தினத்தன்று வாடகைதாரரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய தொகை ரூபா. 2,220,774 ஆகவிருந்தது. இது தொடர்பாக எந்தவித சட்டரீதியமன நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்க வில்லை.

### 3.4 பயன்பாடற்ற அல்லது குறை பயன்பாடுடைய சொத்துக்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதித் தினத்தில் ரூபா. 6,587,500 பெறுமதியான 09 வாகனங்கள் பயன்படுத்தப்படாமல் அல்லது குறை பயன்பாட்டுக்கு உட்படுத்தப்பட்டு இருந்தன. | பாவனைக்கு உகந்த நிலையில் இல்லாத வாகனங்களை கைதவிர்ப்பு செய்வதற்காக தேவையான தகவல்கள் 2023.03.21 அன்று உள்ளூராட்சி ஆணையாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | நீக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நுவரெலியாவிற்கு வருகின்ற உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு தேவையான தகவல்களை வழங்குவதற்காக விக்டோரியா பூங்காவிற்கு அருகில் அமைந்துள்ள, மாநகர சபையினால் பராமரிக்கப்பட்டு வருகின்ற தகவல் மையத்தினூடாக சுற்றுலாப் பயணிகளுக்கு முறையான வழிகாட்டல் வழங்கப்பட்டிருக்க வில்லை. அதற்குப் பொறுப்பாக சிற்றூழியர் ஒருவர் நியமிக்கப் பட்டிருந்ததுடன் 12 சுற்றுலா நிலையங்கள் தொடர்பிலான தகவல்கள் மாத்திரம் பரிமாறப்பட்டிருந்தன. | சுற்றுலாப் பயணிகளுக்கான அடிப்படை வசதிகள் மற்றும் சுற்றுலா மையங்கள் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளும் வசதிகளுடன் கூடிய கட்டடமாக மாற்றுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாக | முறையாக பராமரிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | சல்வீனியா மற்றும் ஜப்பான் ஜபர ஆகியவற்றால் கிரெகரி வாவியின் 30 வீதத்திற்கும் அதிகமான பரப்பு ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதுடன் யுலக்ஸ், பெரிய தொட்டாசினுங்கி நிதிகும்பா, கன்தபான, கடு பதொக் ஆகிய வகைகளும் நுவரெலியா நகர எல்லையினுள் பெருகி வருகின்ற போதும், இவ்வாக்கிரமிப்புத் தாவரங்களை அழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | ஆக்கிரமிப்புத் தாவரங்களை அகற்றுவதற்கு போதியளவு ஊழியர்கள் சபையில் காணப்படவில்லை என்பதாக | ஆக்கிரமிப்புத் தாவரங்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | கிரெகரி வாவியின் I ஆம் கட்டத்தில் சுற்றுலாப் பயணிகள் ஓய்வெடுப்பதற்கான இடம் காணப்படாதிருந்த அதேவேளை, III மற்றும் IV ஆம் கட்டங்களில் அமைந்துள்ள ஓய்வறைகள் அசுத்தமடைதல், கழிவறைகளுக்கு அண்மையில் அமைந்திருத்தல், கட்டாக்காளி மாடுகள் உலா வருதல் ஆகிய காரணங்களால் சுற்றுலாப் பயணிகள் பயன்படுத்த முடியாத நிலையில் கைவிடப்பட்டிருந்தன. | ஓய்வறைகள் மற்றும் கழிவறைகளை சுத்தம் செய்வதற்கு தேவையான அறிவுறுத்தல்களை வழங்குவதும் மேற்பார்வை செய்தலும் இடம்பெற்று வருவதாக | முறையாக பராமரிக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | கிரெகரி வாவியில் அனுமதிக்கப்பட்ட வள்ளங்களின் எண்ணிக்கை 115 ஆக இருந்த போதும் சபையினால் அந்த வள்ளங்கள் தொடர்பாக மேற்பார்வை செய்யப்பட்டிருக்கவில்லை. வள்ளங்களிலிருந்து வாவி நீரில் எண்ணைய் போன்றன கசிவதன் காரணமாக சூழல் மாசடைவு ஏற்பட்டிருந்தது. அதிவேக வள்ள சவாரி காரணமாக வாவிக் கரை அரிப்புக்கு உள்ளாகியிருந்தது. | திட்டமொன்றினை வகுப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக. | வள்ள சவாரியினை முறைப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (உ) | கிரெகரி வாவியின் நான்காம் கட்டத்தில் ரூபா. 17,509,603 செலவில் 2015 ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்டுள்ள இருவழித் தொடர்பு கொண்ட அச்சுக்கல் (interlock) பாதை முற்றாக காடாகிய நிலையில் குறை பயன்பாட்டிற்கு உட்படுத்தப்பட்டிருந்ததுடன், இடைக்கிடையே கழுவிச் செல்லப்பட்டு கற்கள் கழன்று வேறாகியிருந்தன. ரூபா. 4,262,224 செலவில் வாவியின் 04 ஆம் கட்டத்தில் நிர்மாணிக்கப்பட்ட பொது வீதி மின் கம்பங்கள் அனைத்தும் அழிவுக்குட்படுத்தப் பட்டிருந்ததுடன் அவைகளை திருத்தியமைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படாததன் காரணமாக கிரெகரி வாவி இரவு நேரத்தில் முற்றாக இருளில் மூழ்கியிருந்தது. கிரெகரி வாவியின் II மற்றும் IV ஆம் கட்ட பிரதேசங்களில் வேலி எல்லைகள் அமைக்கப்பட்டு வாவி மைதானத்தை பாதுகாப்பதற்கும் சட்டவிரோதமாக உள் நுழைவோரை தடுப்பதற்கும் சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வேலி எல்லைகளை கருத்திற் கொள்ளாது கோவேறு கழுதைகள் மற்றும் மாடுகள் உள் நுழைவதை தடுப்பதற்கு முதலில் கோவேறு கழுதைகளை தடுத்து வைப்பதற்கு பொருத்தமான ஒரு இடம் தயார் செய்யப்படல் வேண்டும். அதன் பின்னர் வேலி எல்லைகளை அமைத்து சட்டவிரோதமாக உள் நுழைவோரை தடுப்பதானது கூடுதல் வெற்றியளிப்பதாக அமையுமென்பதாக. | கிரெகரி வாவி முறையாக பராமரிக்கப்படல் வேண்டும். |
| (ஊ) | மத்திய சந்தையின் மீன் விற்பனை நிலையம் விக்டோரியா பூங்காவை அண்மித்த வகையில் காணப்படுவதுடன் அதன் கழிவு நீர் நேரடியாக தலகல ஓயாவிற்கு திறந்து விடப்படுவதன் | கணக்காய்வின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதை போன்று குறித்த சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்கு | கழிவு நீர் முறையாக அகற்றப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காரணமாக கிரெகரி வாவி அசுத்தமடைந்திருந்தது. | நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக | |
| (எ) | கிரெகரி வாவி மதில் நிர்மாண வேலைகள் தாமதமடைந்துள்ளதுடன் இதன் காரணமாக கரை அரிப்புக்கு உள்ளாகியுள்ளது. இதன் காரணமாக வள்ள உரிமையாளர்களுக்கு தமது வள்ளங்களை நிறுத்தி வைப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதுடன் அக் கரையை மீண்டும் திருத்தம் செய்வதற்கு நகர சபையின் மூலம் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கிரெகரி வாவியில் வள்ள சவாரியினை மேற்பார்வை செய்வதற்கான பொருத்தமானதொரு வழிமுறையினை தயாரிப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக. | கிரெகரி வாவி முறையாக பராமரிக்கப்படல் வேண்டும். |
| (ஏ) | 1980 முதல் சபைக்கு கிடைக்கப் பெற்றிருந்த 04 வாகனங்களின் உரிமையினை சபைக்கு கையேற்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வருமான அனுமதிப்பத்திரம் பெறுவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக. | உரிமையினை கையேற்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3.6 பெறுகைகள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கொங்கிரிட் சுவரொன்றினை அமைப்பதற்காக ரெடிமிக்ஸ் கொன்கிரிட் 33 கன மீற்றரகளை கொள்வனவு செய்வதற்காக விலைமனுக் கோரல் வழிகாட்டிக் கோவையினை பின்பற்றி விலைமனுக் கோரல் மேற்கொள்ளாது 2023 மார்ச் 15 ஆம் திகதி தனியார் நிறுவனம் ஒன்றிடமிருந்து மாத்திரம் விலைமனு பெறப்பட்டு தரப் பரிசோதனை மேற்கொள்ளப்படாது 32 கன மீற்றர் ரெடி மிக்ஸ் கொங்கிரிட் கொள்வனவு செய்வதற்காக ரூபா 1,729,600 செலவிடப்பட்டிருந்தது. | நுவரெலியாவில் அமைந்துள்ள ஒரு நிறுவனத்தில் கொள்வனவு செய்யப்பட்டதாகவும் மற்றும் குறித்த நிறுவனத்திடமிருந்து ஆய்வுகூட அறிக்கை பெறப்பட்டதாகவும் | முறையான வழிமுறைகள் பின்பற்றப்படல் வேண்டும். |

## 3.7 ஒப்பந்த நிர்வாகத்தின் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கிரெகரி வாவி கோல்ப் விளையாட்டுத் திடலில் ஓய்வறையொன்றினை அமைப்பதற்காக ரூபா. 2,820,836 தொகைக்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு ஒப்பந்த அடிப்படையிலான கட்டட நிர்மாண கலைஞர் ஒருவரிடம் ஒப்படைக்கப்பட்டு அனுமதிக்கப்பட்ட கட்டட விதந்துரைகளுக்கு முறனான வகையில் குறைந்த தரத்தில் நிர்மாணிக்கப்பட்ட | குறைபாடுகளை நிவர்த்தி செய்து கொள்வதற்கான நடவடிக்கை எடுப்பதாக | குறித்த அனுமதிகளை முறையாகப் பெற்று ஒப்பந்தத்தின் தரத்திற்கு அமைவாக வேலைகள் முடிக்கப்படல் வேண்டும். |

கட்டடத்திற்காக ரூபா. 1,884,734 கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. நிர்மாண வேலைகள் பரிசோதனைக்குட்படுத்தப்பட்ட போது கொன்கிரிட் இடல் மற்றும் பயிற்றப்பட்ட பயிற்றப்படாத தொழிலாளர்களுக்கான கொடுப்பனவாக ரூபா. 567,950 கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. அதேபோன்று மத்திய சுற்றாடல் அதிகார சபையின் அனுமதியின்றி சுற்றாாடல் பாதுகாப்பு வலயத்தினுள் கட்டட நிர்மாணங்கள் தொடர்பாக மத்திய சுற்றாடல் அதிகார சபை சட்ட நடவடிக்கைகளை ஆரம்பித்திருந்தது.

## 3.8 மனித வள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சுபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதித் திகதியன்று 33 பதவிகளுடன் தொடர்பான 132 வெற்றிடங்களும், அனுமதிக்கப்பட்ட 03 பதவிகளுடன் தொடர்பான 55 மேலதிகங்களும், அனுமதிக்கப்படாத 03 பதவிகள் தொடர்பான 14 மேலதிகங்கள் உட்பட 69 பதவிகளுக்கான வெற்றிடங்கள் காணப்பட்டதுடன், பொறியியலாளருக்கான ஒரு வெற்றிடம், வருமான பரிசோதகர் களுக்கான 04 வெற்றிடங்கள், பொது சுகாதார பரிசோதனை உத்தியோகத்தர்களுக்கான 03 வெற்றிடங்கள் மற்றும் முகாமைத்துவ சேவை தொடர்பான 13 வெற்றிடங்கள் காணப்பட்டன. | தற்பொழுது இணைப்புச் செய்யப்பட்டுள்ள அதிகாரிகளின் சேவையினை உச்ச அளவில் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை எடுப்பதாக. | வெற்றிடங்கள் பூரணப்படுத்தப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதித் திகதியன்று உயிரிழந்த, ஓய்வு பெற்ற, இடை நிறுத்தம் செய்யப்பட்ட, சேவையிலிருந்து இடைவிலகிய மற்றும் இடமாற்றம் பெற்றுச் சென்ற 78 ஊழியர்களிடமிருந்து மொத்தம் ரூபா. 2,893,861 ஆகிய கடன் மீதிகள் அறவிடப்பட்டிருக்கவில்லை. | மேலும் அறவிடப்பட வேண்டிய மீதிகள் தொடர்பாக பரிசீலிக்கப்பட்டு வருவதாக | கடன் மீதிகள் அறவிடப்படல் வேண்டும். |

## 4. கணக்களி தன்மையும் நல்லாளுகையும்

### 4.1 சுற்றாடல் தொடர்பான பிரச்சினைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மனித வளம் போதியளவு காணப்பட்ட போதும் மாநகர சபை அதிகாரப் பிரதேசத்தினுள் கழிவு முகாமைத்துவமானது முறையாக மேற்கொள்ளப்படாதிருந்ததுடன், | முறையான திட்டமிடலின் அடிப்படையில் கழிவு முகாமைத்தினை | கழிவு முகாமைத்தினை முறையாக மேற்கொள்ளல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காட்போட், பிளாஸ்டிக், போத்தல், பொலிதீன் மற்றும் இலத்திரனியல் கழிவுகள் அனைத்தும் சந்ததன்ன கழிவகற்றல் பூமியில் கொட்டப்பட்டிருந்தன. | மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | |
| (ஆ) | 2004 – 2016 அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் நிர்மாணிப்பதற்குத் திட்டமிடப்பட்ட மலசல வடிகாலமைப்பு தொகுதி 20 வருடங்களின் பின்னரும் மாநகர சபை மூலம் நிர்மாணிக்கப்படாததன் காரணமாக பருக்பிலேன் வாவி, கிரெகரி வாவி மற்றும் கல்வேஸ்லேன்ட் வனப் பாதுகாப்புப் பிரதேசத்திற்கும் மலசலக் கழிவுகள் அகற்றப்பட்டமை காரணமாக மாசடைவிற்கு உள்ளாகியிருந்தன. | முறையான திட்டமிடலின் அடிப்படையில் கழிவு முகாமைத்தினை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | கழிவு முகாமைத்தினை முறையாக மேற்கொள்ளல் வேண்டும். |
| (இ) | மாநகர சபைச் சட்டத்தின் 98 (1) பிரிவின் பிரகாரம் நகரத்தின் பொதுக் காண் தொகுதியினை சுத்தம் செய்வதற்கு பொருத்தமான வேலைத்திட்டமொன்று அமைக்கப்பட்டிருக்கவில்லை. | முறையான திட்டமிடலின் அடிப்படையில் கழிவு முகாமைத்தினை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | கழிவு முகாமைத்தினை முறையாக மேற்கொள்ளல் வேண்டும். |